**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**

**அ.வ.எண்.340/2023**

**தேதி : 20.02.2025**

**(பி.வா.சா.1) – திருமதி. கவிதா**

**சாட்சி அழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை :– (வாதி தரப்பில்)**

1. நான் மெஸ் நடத்தி வருகிறேன். சின்னக்கலையம்புத்தூர் வி.கே.மில்ஸ் அருகில் மெஸ் நடத்தி வருகிறேன். என்னுடைய கணவர் 28.08.2023ம் தேதியன்று இறந்துபோனார். எனக்கு ஒரு பெண் குழந்தை உள்ளது. நான் தற்போது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள முகவரியில்தான் குடியிருந்து வருகிறேன். நான் விலைக்கு வாங்கிய வீட்டில் யார் குடியிருக்கிறார் என்றால் அந்த சொத்தை நான் விற்றுவிட்டேன். நான் ரூ.8,00,000/– க்கு மேற்படி சொத்தை வாங்கினேன். அதை ரூ.8,25,000/–க்கு சுமார் ஒரு வருடம் முன்பாக விற்றுவிட்டேன். மேற்படி விபரத்தை நான் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி விபரத்தை நான் என்னுடைய எதிர்வழக்குரையிலும் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான்.

2. வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரை மற்றும் ஆவணங்களை நான் படித்துப் பார்த்தேன். நானும், அமுதாவும் நெருங்கிய நண்பர்கள் என்றால் சரியல்ல. அமுதா, வாதி பாண்டியிடம் 05.06.2022ம் தேதி ரூ.3,00,000/– கடன் வாங்கிய விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு நேரடியாக தெரியாது. வாதி என்ன தொழில் செய்து வருகிறார் என்று எனக்கு தெரியாது. வாதி அமுதாவிடம் கிரையத்திற்கு கேட்டதாக நான் பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ள விபரங்கள் எனக்கு எப்படி தெரியும் என்றால் அமுதாதான் என்னிடம் கூறினார். மேற்படி விபரங்களை அமுதா கூறியதாக என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை.

3. வழக்குச்சொத்து வி.கே.மில்ஸ் கிராமத்தில் உள்ளது. வழக்குச் சொத்தை விற்றபோது அமுதா சின்னக்கலையம்புத்தூரில் குடியிருந்தார். தற்போதும் அமுதா சின்னக்கலையம்புத்தூரில்தான் குடியிருந்து வருகிறார். எதிர்வழக்குரை பத்தி 6ல் தாவாக்கடனை 1ம் பிரதிவாதியிடம் வசூலிக்க வாதிக்கு உரிமை உள்ளதாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். 05.06.2022 அன்று வாதியிடம் 1-ம் பிரதிவாதி ரூ.3,00,000/-த்தை கடனாக பெற்றுள்ளதால் அந்த கடனை திருப்பிச் செலுத்தாமல் மோசடியாக கிரைய ஆவணத்தை நாங்கள் உற்பத்தி செய்துள்ளதாகச் சொன்னால் சரியல்ல. வாதிக்கு அவர் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

4. நான் 1ம் பிரதிவாதியிடம் பெற்ற கிரையம் சட்டப்படி செல்லாது என்றும், தாவா கடனை கட்டுப்படுத்தாது என்றும் சொன்னால் சரியல்ல. நீதிமன்ற அழைப்பாணையை பெற்றுக்கொண்டு நான் நீதிமன்றத்தில் முன்னிலையானேன் என்றால் சரிதான். அழைப்பாணையை பெற்றுக்கொண்டு வாதியின் மீது நான் எவ்வித புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

<u>1-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u> :- இல்லை.

<u>மறு விசாரணை</u> :- இல்லை.

K BHARATHI

Digitally signed by K BHARATHI
Date: 2025.02.20 18:39:28 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
பழனி.